# கனிகொடுத்தல்

**கர்த்தர்மேல் நம்பிக்கைவைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் தண்ணீரண்டையிலே நாட்டப்பட்டதும், கால்வாய் ஓரமாகத் தன் வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும், மழைத்தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றித் தப்பாமல் கனி கொடுக்கிறதுமான மரத்தைப்போலிருப்பான் (எரே 17:7,8)**




இவ்வுலகத்தில் வாழும் மக்களை இரண்டு வகையாக பிரிக்கலாம். ஒரு சாரார் தங்கள் வாழ்க்கையை குறித்த தேவ நோக்கத்தை உணர்ந்தவர்களாக, அதற்கேற்றபடி தங்கள் வாழ்க்கையை நடத்துகிறவர்களாக, வாழ்க்கையின் எந்த ஒரு காரியத்திலும், அது ஆவிக்குரிய காரியமானாலும் சரி, இவ்வுலகத்திற்குரிய காரியமானாலும் சரி, தேவனையே சார்ந்து, அவரையே நம்பி வாழ்கின்றனர். தங்கள் வாழ்க்கையில் நடைபெறும் ஒவ்வொரு காரியமும், தேவ சித்தப்படியும், அவரின் திட்டப்படியும், அவருடைய ஆளுகைக்குட்பட்டும் நடக்கிறது என்பதை அறிந்திருக்கின்றனர். ஆதலால் அவர்கள் இவ்வுலகத்தில் வேறு எதையும் சாராமல், அவரையே சார்ந்து ஜீவிக்கின்றனர். இவ்வுலகத்தின் எந்தவொரு காரியமும், மாற்றங்களும், அவர்களின் வாழ்க்கையின் ஓட்டத்தை மாற்றவோ, தடைப்பண்ணவோ முடியாது. எனவே அவர்கள் மற்ற எதை குறித்தும் கவலைபடமாட்டார்கள். வேதாகமத்தில் பல தேவ

மனிதர்களின் வாழ்க்கையில் நாம் இப்படிப்பட்ட காரியங்களை காணலாம் (உதாரணமாக: யோசேப்பு, மோசே, தாவீது, எலியா, ஏசாயா, எரேமியா, பவுல் போன்றோர்). இப்படிப்பட்டவர்களையே பாக்கியவான் என்று **எரேமியா** 17:7 கூறுகிறது. மேலும் **எரே** 17:8 இன்படி, இப்படிப்பட்ட மக்கள் வாழ்க்கையின் எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் தேவனுக்கேன்று கனிகொடுக்கிறவர்களாய் காணப்படுவார்கள். அவர்களின் மூலமாய் தேவதிட்டம் குறித்த காலத்தில், குறித்த நேரத்தில் நிறைவேறியே தீரும். அதை எந்த வல்லமையினாலும் தடுக்க முடியாது. ஏனெனில் அவர்கள் ஜீவ தண்ணீராம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவில் நாட்டப்பட்டவர்கள் **(எரே 17:8) (யோ 4:14).**

**"யோசேப்பு கனிதரும் செடி; அவன் நீர் ஊற்றண்டையிலுள்ள கனிதரும் செடி; அதின் கொடிகள் சுவரின்மேல் படரும்" (ஆதி** 49:22). ஆம் யோசேப்பு தன் வாழ்க்கையில் எத்தனையோ விதமான சூழ்நிலைகளுக்குள்ளாய் தன் வாலிப நாட்களிலேயே கடந்து சென்றார். தன் தாய், தகப்பன், சகோதரரோடு ஒரு அமைதியான வாழ்க்கையை வாழ்ந்தார். தன் சகோதரரின் வாழ்க்கை தரம் எப்படியிருந்தாலும், தன் சிறு வயதில் இருந்தே தேவனையே தன் நம்பிக்கையாக கொண்டிருந்து, தேவன் தனக்கு வெளிப்படுத்தின காரியங்கள் நிச்சயமாக நிறைவேறும் என்று அவர்மேல் நம்பிக்கை கொண்டிருந்தார். சூழ்நிலைகள் யாவும் அதற்கு விரோதமாய் இருந்தாலும், போத்திபாரின் வீட்டிலும், சிறைச்சாலையிலும், உண்மையாய் தன் பணிகளை செய்தார். தேவ திட்டத்திற்கு எதிராய் இருக்கிற சூழ்நிலையில் தான் ஏன் வாழவேண்டும் என்று அவர் நினைக்கவில்லை.

ஏனெனில் எப்படிப்பட்ட எதிர்மறையான சூழிநிலையிலும் அவர் கனிதரும் செடியாய் இருந்தார். ஏற்றகாலத்தில் தேவன் அவரை உயர்த்தி, அவரால் அநேகர் போஷிக்கப்படும்படியாய், விசேஷமாக இஸ்ரவேல் குடும்பத்தார், சந்ததியாய் போஷிக்கப்படும்படியாக அவரை வைத்தார். இவ்வாறாகவே மற்ற தேவ மனிதர்களும் கனிதருகிறவர்களாய் இருந்தனர். அதே வேளையில், இவ்வுலகதில் இன்னொரு சாராரான மனிதர்களும் உண்டு. **"மனுஷன்மேல் நம்பிக்கைவைத்து, மாம்சமானதைத் தன் புயபலமாக்கிக்கொண்டு, கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே** 17:5). இவர்கள் தேவனை அறியாதவர்களாகவும் அல்லது அறிந்தும் அவருக்கு கீழ்படியாதவர்களாகவும், மற்ற மனுஷரை சார்ந்து கொண்டு அல்லது தங்கள் ஆஸ்தி, பெலன், அறிவு ஆகியவற்றை சார்ந்து கொண்டு, தேவ திட்டத்தை பற்றி அறிவில்லாமல், தாங்களாகவே தங்களுக்கு என்று சில

காரியங்களை நியமித்து கொண்டு, அவற்றை அடையவும், அநுபவிக்கவுமே தங்கள் வாழ்க்கையின் காலங்களை செலவிடுகின்றனர்.

வேதாகமத்திலும் பழைய ஏற்பாட்டில் சவுல், அப்சலோம், நேபுகாத்நேச்சார், புதிய ஏற்பாட்டில் பரிசேயர், சதுசேயர் போன்றோர் தங்களைகுறித்த தேவ நோக்கத்தை அறியாமல், தாங்களாகவே சில காரியங்களை சார்ந்து கொண்டு, கனியற்ற சபிக்கப்பட்டவர்களாக காணப்படுகின்றனர். உலகின் இக்காலகட்டத்திலும் இப்படிப்பட்ட மனிதர்களே வாழ்கின்றனர். ஒரு பக்கம் தேவனுக்காய், தேவ திட்டத்திற்காய், தேவ இராஜ்யத்தின் விரிவாக்கத்திற்காய், தேவனையே சார்ந்து இரவும் பகலும் ஓடும் மக்கள். மற்றொரு புறம், இவ்வுலகத்தை ஆதாயப்படுத்தி கொள்ளும்படியாய், தங்கள் நித்திய ஜீவ வாழ்க்கையையும் நஷ்டப்படுத்தி, இவ்வுலகத்தின் மக்கள் மேலும், செல்வம், புகழ், பதவி, அதிகாரம் ஆகிய இவைகளின் மேலும் தங்கள் நம்பிக்கையை வைத்து அதற்காக ஓடும் மக்கள்.

இவை எல்லாவற்றிற்கும் தேவன் ஒரு முடிவை வைத்திருக்கிறார். ஏனெனில் **“என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப்போடுகிறார்; கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார்” (யோ 15:2)**. எனவே தேவனுக்கென்று நற்கனி தரும் மரங்களாய் நாம் வாழ்வோம். அவரையே சார்ந்துகொள்வோம். ஆமென்.